### மணிவாக்கு

அன்பே சிவமாகக் கண்ட பெரியோர்க்கு துன்பங்கள் ஏதுமுண்டோ-குதம்பாய் துன்பங்கள் ஏதுமுண்டோ.
ஓம் சிவாய நம வென்று சொல்லுவார் தாம் சிவமானரடி-குதம்பாய் தாம் சிவமானரடி.
—யோக சுவாமிகள்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna Telephone: 38

பரிதாபி வருஷம் சித்திரை மாதம் 14-ந் திகதி (26-4-72)


## தமிழ்க் கல்விப் பிரிவு

நாட்டிலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகளை நிர்வகிப்பதற்குக் கல்வித் திணைக்களத்தில் தனிப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறித்து இந் நாட்டிலுள்ள முக்கியமாக சிறுபான்மைச் சமூகத்தினரான தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் மகிழ்ச்சியடைவர்.

இந்தப் புதிய பிரிவைத் தொடக்கிவைத்த கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத், தமிழ் முஸ்லிம் பாடசாலைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுமென்றும் இதற்காக கல்வித்திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தனித் தமிழ்ப் பிரிவு பணியாற்றுமென்றும் உறுதியளித்திருக்கிறார்.

நாட்டில் இப்போது சுமார் பத்தாயிரம் பாடசாலைகள் உள்ளன. இவற்றில் சுமார் மூவாயிரம் பாடசாலைகள் தமிழ்ப் பாடசாலைகளாகும். இந்த மூவாயிரம் தமிழ்ப் பாடசாலைகளில் பெரும்பாலானவை வடபகுதியிலும் மற்றவை கிழக்கு மாகாணத்திலும் மலைநாட்டிலும் இருக்கின்றன. சிங்களப்பகுதிகளிலும் சில தமிழ்ப் பாடசாலைகள் இருக்கின்றன. தமிழ்ப் பாடசாலைகளுக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆசிரியர் இடமாற்றப் பிரச்சினை காரணமாக தென்னிலங்கையிலுள்ள சில தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட வேண்டியேற்பட்டதும் நாடறிந்த விஷயம். தமிழ்ப்பாடசாலைகளின் தேவைகளும் நிறைய இருக்கின்றன. இவற்றை நிறைவேற்றுவதற்கு இப் புதிய பிரிவின் மூலம் வழிபிறக்குமென்று எதிர்பார்க்கலாம்.

கல்வித்துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் கூட இப் புதிய பிரிவின் மூலம் வீண் செலவுகளும் வீண்சிரமங்களும் பெருமளவு குறையுமென நம்பலாம். தமிழ்ப்பிரிவொன்றைத் தனியாக ஆரம்பித்ததன் மூலம் தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் பெரும் நன்மையைக் கல்வியமைச்சர் செய்துள்ளார்.

கல்வித்திணைக்களத்துக்குச் செல்லும் தமிழ் ஆசிரியர்களும் கல்வித் திணைக்களத்திலிருந்து கடிதங்கள் கிடைக்கும் தமிழ் ஆசிரியர்களும் பிறரின் உதவியை நாட வேண்டியிருந்தது. தமிழ்ப் பிரிவொன்று தொடக்கப்பட்டிருப்பதால் இந்தக் கஷ்டம் இனி இருக்கமாட்டாது என்று எதிர்பார்க்கலாம்.

இப் புதிய தமிழ்ப் பிரிவு மூன்று உறுப்புகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ஒன்று தமிழ்ப் பாடசாலைகள் தொடர்பான விவகாரங்களையும் மற்றது முஸ்லிம் பாடசாலைகள் அரபுமொழி அபிவிருத்தி மற்றிய அலுவல்களையும் மூன்றாவது உறுப்பு தோட்டப் பாடசாலைகள் தொடர்பான அலுவல்களையும் கவனிக்கும். இந்த மூன்று பகுதிக்கும் அதற்குப் பொருத்தமானவர்களையும் அமைச்சர் நியமித்துள்ளார்.

நிர்வாகமும் அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்திருக்காமல் அவை பரவலாக்கப்படவேண்டுமென்பது காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கையாகும். கல்வி அமைச்சர் அக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு வழிகாட்டியிருக்கிறார். இதர அமைச்சர்களும் இதைப் பின்பற்றினால் தொல்லைகள் பல நீங்க வழிபிறக்கும்.

## தப்பி ஓடிய ஒரு கைதியின் கதை

யாழ்ப்பாணம், புதன்

நேற்று முன்தினம் யாழ் சிறையிலிருந்து தப்பிய கைதி நேற்றுக்காலை வசமாக மாட்டிக்கொண்டார். ஒரு பெண்ணின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு கம்பி நீட்டியபோது பொலிசாரும் சிறைஊழியர்களும் அவரை மடக்கிப்பிடித்தனர். சிறைச்சாலைக்குஅண்மையில் தான் இச் சம்பவம் நிகழ்ந்தது. அவர் தமது கைவரிசையைக் காட்டிய பெண் யார் தெரியுமா? சிறைச்சாலை கேற்றன்!

உடுநகரைச் சேர்ந்த யோகன் என்ற இந்தக்கைதி சிறைச்சாலை மேற்றனிடம் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட்டம்பிடிக்கையில் அவர் சத்தமிடவே சத்தம் கேட்டுப் பொலிசாரும் சிறை ஊழியரும் அவரைத் துரத்தினராம். அவர்கள் தம்மைப் பின்தொடர்ந்து துரத்துவதைக் கண்ட கைதி வேறுதிசையில் ஓடமுயன்றார். ஆனால் அந்தோ அத்திசையில் எதிர்ப்பட்டவர் உயர் அதிகாரிகள்! அவர்கள் காற்று வாங்குவதற்காக அங்கு வந்திருந்தனர். கைதி எப்படித் தப்புவார்? யாவரும் எல்லோரும் சேர்ந்து அவரை மடக்கிப் பிடித்தனர்.

------

### நியமனம்

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு கரைதுறைப் பற்றுக் காரியாதிகாரி பிரிவின் முதல் கலாச்சார உத்தியோகத்தராக செல்வி அஞ்சலா இராசதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

## குடிகாரர் கேட்ட ஒரே வரம்!

### ஐயாறன் எழுதுவது

சென்னையிலே ராஜாஜி முதல் அமைச்சராக இருந்த காலம். 1937-ம் வருஷம். தாம் பிறந்த மாவட்டமான சேலத்தில் முதல் முதலாக மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்தார். படிப்படியாக வேறு மாவட்டங்களிலும் கள்ளு சாராயத்தவறணைகளை மூடுவதற்கு பொதுக்கூட்டங்களில் பெரிய பிரசாரம் செய்தார்.

சென்னையிலே ராயபுரம் எனுமிடத்தில் இவ்விதக்கூட்டமொன்று நடந்தது. அங்கு செல்லுகையில் ஒரு ரிக்ஷாக்காரரும் என்னுடன் வந்துகொண்டிருந்தார். மதுவிலக்கைப்பற்றி அவர் கருத்தைக் கேட்டேன். அவர் சொன்னார்.

"எனக்குச் சொந்த ஊர் சேலம். என் அக்காபுருசன் ஒரு குடிகாரன். அக்காவின் நகையெல்லாம் அடித்து வாங்கிக் குடித்துப்போட்டு, தினம் அடிப்பான். வீட்டில் தினம் சண்டையும் கூச்சலும் தான். மகராசன் ராசாஜி, அங்கு கள்ளுக்கடைகளைமூடி ஆறுமாசம் ஆவுது. தன் புருசன் இப்போது குடிப்பதில்லை என்றும், குடும்பம் அமைதியாக இருப்பதாயும் தன் கையிலும் கழுத்திலும் தங்க நகை திரும்பக் காணக் கூடியதாக இருப்பதாயும் அக்கா எழுதியுள்ளது கேட்கவே சந்தோசமாக இருக்குது.

"எனக்கும் அந்தச் சனியன் எப்படியோ பிடித்து விட்டது. இனி குடிக்கக் கூடாதென்று நான்பலமுறை மனசில் தீர்மானிப்பேன். ஆனால் கள்ளுக்கடைகளைப் பக்கத்தில் கண்டவுடன் அந்த வைராக்கியமெல்லாம் பறந்திடும். குடித்துத்தான் வருகிறேன். சேலத்தில் செய்ததுபோல் சென்னைப் பட்டணத்திலும் கள்ளுக்கடைகளை மூடிவிட்டால், குடிக்காமல் இருக்கலாம். ராசாசி அப்படிச் செய்தால் இங்கு எவ்வளவோ ஏழைக் குடும்பமெல்லாம் சந்தோசமாக இருக்கும்" என்றார். குடிகாரர்கேட்ட ஒரேவரம், கள்ளுக்கடைகளை மூட வேண்டுமென்பதே.

0 0 0

இப்போது சேலத்தில் மட்டுமல்ல தமிழ்நாடெங்கும் மதுபானக்கடைகளைத் திறந்துவிட்டனர். அரசாங்கத்துக்கு அதிக வருமானம். பெண்மணிகள் மீண்டும் நகைகளை இழக்கிறார்கள் குடும்பங்களில் அமைதியில்லை. மீண்டும் மதுவிலக்கு வேண்டுமென்று கேட்டு சேலத்தில் மணி என்பவரும் விருதுநகரில் சுப்பிரமணிய நாடார் என்பவரும் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கிறார்கள். மதுவிலக்குபற்றி முதல் அமைச்சர் சர்வஜன வாக்கெடுப்பு எடுக்கவேண்டுமென்று கேட்டுள்ளனர்.

பிடிவாதமுள்ள அரசு இதனால் மனம் மாறுமென்றும் உண்ணாவிரதமிருந்து உயிர் விடக்கூடாதென்றும் வேண்டுமானால், கள்ளுக்கடை மறியல்செய்து தமிழ மக்களுக்குச் செய்யப்பட்ட தீமையை எதிர்க்கலாமென்றும் ராஜாஜி தெரிவித்துள்ளார்.

"ஒருவரது உயிர் அவரது சொந்தச் சொத்தல்ல. தம் இஷ்டம் போல் அதை நாசமாக்கக்கூடாது. அது தேசம் காக்கவேண்டிய "டிரஸ்டு"ம் மக்களின் உயிர்கள் அரசின் சொத்து என்று சர்வாதிகாரிகள் கூறலாம். ஆனால் அவை கடவுளின் சொத்து. எனவேதான் தற்கொலை என்பது, தன்வசமுள்ள ஒரு குழந்தையைக் கொலைசெய்வது போலாகும் என்று கூறியுள்ளார் அவர்.

0 0 0

நாட்டிலே ஒவ்வொரு கிராமத்திலும் கள்ளுத்தவறணைகளை ஆரம்பிப்பதை உடன் நிறுத்திவிடவேண்டுமென்று பிரதம மந்திரியை மகா சங்கத்தின் பெயரால் வேண்டிக்கொள்வதாக பௌத்த தலைவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதுபானம் பௌத்தர்களுக்கு மாறு என்றும், புதிய தவறணைகளையும், சூதாட்டக் கடைகளையும் திறப்பது தேசிய குற்றமென்றும், அதை நிறுத்தவேண்டுமென்றும் முன்னாள் நீதியரசர் ஹேமா பஸநாயக கேட்டுள்ளார்.

0 0

இதே சமயம் நம் யாழ்ப்பாணத்தின் நிலைமை என்ன? பல இடங்களிலும் கள்ளுத் தவறணைகள் வர இருப்பதைக் கேட்டு பொதுமக்கள் ஆங்காங்கே கலக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இது பற்றி நம் தலைவர்கள் கண்டித்துப் பேசுவதில்லை. கண்டித்தால் அடுத்த தேர்தலில் ஓட்டுக்கிடைக்காதென்று அவர்களும் அச்சம்போலும்! தெய்வம்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்.

0 0

ஒரு மருந்தாகியுள்ளாய் உம்பரோடுலகுக் கெல்லாம், பெருமருந்தாகி நின்றாய் பேரமுதின் சுவையாய், கருமருந்தாகியுள்ளாய் ஆளும் வல்வினைகள் தீர்க்கும் அருமருந்தனையாய் அப்பனே அருள் செய்யாயே.

— அப்பர்சுவாமிகள்;

ஆசிரியருக்குக் கடிதம்

## ஆவணிமூலம் 4-ம் திகதி

இவ்வருடம் ஆவணி மூலம் எந்தத் திகதியில் கைக்கொள்வதென ஓர் ஐயம் எழுந்துள்ளது. வாக்கிய திருக்கணித பஞ்சாங்கம் ஆவணி 5-ந் திகதியும், கொக்குவில் இரகுநாதையர் பஞ்சாங்கம் 3-ந் திகதியும் கொக்குவில் இராசதுரை பஞ்சாங்கம் 4-ந் திகதியுமெனக் கணித்துள்ளன.

இதில் திருக்கணித பஞ்சாங்கத்தில் ஆவணி மாதப் பிறப்பு வாரம் வித்தியாசப்பட்டதால் வாக்கியத்திற்கு ஒருநாள் முந்தினதால் 5-ந் திகதி ஞாயிற்றுக் கிழமையெனவும் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யெனவும் வந்தது. ஆகையால் திருக்கணிதத்திற்கும் கொக்குவில் இராசதுரை பஞ்சாங்கத்திற்கும் ஆவணி மூலம் ஒரே கிழமையாக வருதலால் ஏற்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வருடம் சேனாதிபதி திருக்கணிதத்திற்கும் வாக்கியத்திற்கும் ஒன்றுகூடியே வந்திருக்கிறார். ஆவணி மாதப்பிறப்பிற்கு இவ் வாரமே சேனாதிபதி வித்தியாசம் என்னவெனின் திருக்கணிதத்திற்கு சங்கிராந்தி சூரிய அஸ்தமனத்திற்கு முன்.

வாக்கியத்திற்கு அஸ்தமனத்திற்கு முன்பே ஆயின் அன்றே கொள்க. அஸ்தமனத்திற்கு பின்னேயாயின் அடுத்த நாள் கொள்க என்ற விதியின் மாறுதல் ஏற்பட்டது எனவே ஆவணி மாதம் 4ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தான் ஆவணி மூலம் சரி. திருக்கணிதத்தின் படியும் ஞாயிற்றுக்கிழமைதான் வருகின்றது. இரண்டும் ஒன்றே.

கொக்குவில் இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் 3ந் திகதி சனிக்கிழமை ஆவணி மூலமெனக் கணிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரம் வந்தால் பின்னையதைக் கைக்கொள்வதுதான் ஒருசிறப்பு விதி. ஆனால் இந்த நட்சத்திரம் ஆவணி மாதத்திற்கும் புரட்டாதி மாதத்திற்கும் உரியதாக இருக்கின்றது. இதை இவ்வருட பஞ்சாங்கத்தில் காணலாம்.

எனவே முன் சம்பவித்த மூல நட்சத்திரத்தைக் கைக்கொள்வது தான் பொது விதி. அப்படியாயின் ஆவணி மாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை தான் சரி. இதே போன்று இரகுநாதையர் பழைய பஞ்சாங்கங்களில் ஆவணிமாதத்தில் தரம் மூலம் இரண்டு சம்பவித்தும், பின்னையது இரண்டு மாதத்திற்குப் பங்குபட்டு வந்தும் முன்னையதைக் கைக்கொண்டதை அவர்களின் (1953, 19 4. 1915, 1896, 1877) முறையே விஜய, ஜய, இராட்சத, சர்முகி, ஈசுர வருடப் பஞ்சாங்கங்கள் சான்று பகரும்.

என். கே. சுப்பிரமணியம்
(சோதிடர்)

"ரவிமதி"
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

### அநாதை குழந்தைகள் நிதி

யாழ்ப்பாணம், புதன்

"ஈழநாடு" அநாதைக் குழந்தைகள் நிதிக்கு சுபாஸ் டூரிஸ்ட் ஹோட்டல் லிமிட்டட் ஊழியர்கள் 35 ரூபா வழங்கியுள்ளார்கள்.

------

### 4 கோவில்களில் திருட்டு

கேதீஸ்வரம், செவ்

மன்னார் மாவட்டத்தில் தேவாலயங்களில் திருட்டுக்கள் அதிகரித்துவருகிறது. கடந்தவாரம் இப்பகுதியில் வெள்ளாங்குளம் புனித சவேரியார் கோவில் பாப்பாமோட்டை சித்தார்த்திரை மாதா கோவில் உட்பட நான்கு தேவாலயங்களில் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

------

### மாந்தை மேற்கு கி ச காரியாலயம்

கேதீஸ்வரம், செவ்

முப்பதினாயிரம் ரூபா செலவில் ஆறுமாதங்களுக்கு முன்னர் கட்டிமுடிக்கப்பெற்றுத் திறப்பு விழாவும் கொண்டாடப்பட்ட மாந்தை மேற்குக் கிராம சபை அலுவலகத்தில் தற்போது வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. மாந்தைச் சந்திக்கு அருகாமையில் வடபுறத்தே இக்காரியாலயம் அமைந்திருப்பதால் பொதுமக்களுக்கு விஷயங்களைக் கவனிக்க வசதியாக இருக்கின்றது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.